# ‘பட்டச்சித்ரா’



ஒரிசாவின் ஓவிய கிராமத்துக்குச் சமீபத்தில் சென்று வந்திருக்கிறார் கலை விமர்சகர் இந்திரன்.

“இந்திய அளவிலான கவிஞர்கள் மாநாட்டுக்குக் கவிஞர் பழமலயுடன் ஒரிசா சென்றபோது அங்குள்ள ரகுராஜ்பூர் கலை கிராமத்துக்குச் செல்லும் வாய்ப்புக் கிடைத்தது. அவர்களின் நுணுக்கமான கலை வேலைப்பாடுகளுடைய ஓவியங்களைக் கண்டு மெய்சிலிர்த்து விட்டேன். அவர்கள் பயன்படுத்தும் வண்ணங்கள் தயாரிப்பைக் கேட்டதும் உறைந்து விட்டேன்” என்கிறார் இவர். அப்படியென்ன விசேஷம் இதில்.



‘‘ஒரிசாவின் சிற்றோவிய (miniature paintings) மரபு ரீதியான ‘பட்டச்சித்ரா’ ஓவியங்கள் தனிச் சிறப்புப் பெற்றவை. இந்த ஓவியங்கள் திட்டவட்டமான தீர்க்கமான கோடுகளால் வரையப்பட்டுள்ளன. இவை நுட்பமான அர்த்தங்களைத் தெரிவிப்பவை. பெரும்பாலான உருவங்கள் பக்கவாட்டு முகத்தோற்றத்தைக் கொண்டவை. விலங்குகள் சர்ரியலிஸத் தன்மையுடன் படைக்கப்படுகின்றன.

“ஒரு காகிதத்துக்குள் பரப்பை பல்வேறு கட்டங்களாகப் பிரித்து அந்தக் கட்டங்களுக்குள் பல்வேறு கதைகளைச் சொல்லும் பாணி இதில் இருக்கிறது. கட்டங்களைப் பிரித்து இவர்கள் வரைவது ஜாமெட்ரிக் முறையில் இல்லை. செடி, பூ, காய், கனி இவற்றைச் சேர்ந்தே இருக்கிறது. ஏனென்றால் இது விவசாய சமூகத்தைச் சேர்ந்த கலை வெளிப்பாடு.’

இந்த ஓவியத்துக்கான வண்ணங்களை இந்தக் கலைஞர்கள் எடுப்பது கொஞ்சம் ஆச்சர்யம்தான் என்கிறார் இந்திரன். பசுவின் கோமியத்தைச் சூடாக்கி, காய வைத்தால் இரண்டு மூன்று நாட்களில் மஞ்சளாகி விடுகிறது. இதைத்தான் மஞ்சள் நிறமாகப் பயன்படுத்துகிறார்கள். சில குறிப்பிட்ட மரங்களின் இலை, செடி, தழைகள் பச்சை நிறத்துக்குப் பயன்படுத்துகிறார்களாம்.



இந்திரன்

இவர்கள் வரைவதற்குப் பயன்படுத்தும் காகிதங்கள் பிரத்யேகமாக இதற்காக ஒரிசாவிலேயே தயாரிக்கப்படுகின்றன என்கிறார் இவர். ஆனால் இந்தக் கலைஞர்கள் வாழ்க்கை?

“ஒரிசாவில் ஓவியங்களும், ஓவியர்களும் கவனிக்கப்படுவதாகத் தெரியவில்லை. அங்கேதான் மனம் ஒடிந்து போகிறேன். அவர்கள் கலைக்கும் அதற்கு எடுத்துக்கொள்ளும் நேரத்திற்குமான வருவாய் கிட்டவில்லை. இம்மாதிரியான கலைஞர்களை மேம்படுத்தத்தான் கிராப்ட் கவுன்சில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தக் கவுன்சில் இடைத் தரகர்களால் மொய்க்கப்பட்டுக் கிடக்கிறது. இந்நிலை மாறவில்லையென்றால், மரபு ரீதியான ‘பட்டச்சித்ரா’ ஓவியங்கள் அழிவதைத் தடுக்க யாராலும் முடியாது!’’ என்று கொதிக்கிறார் இந்திரன்.

— ஏக்ஜி